DEPOSITION OF WITNESS
(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 87/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : பார்த்திபன் (காவல் துணை கண்காணிப்பாளர்) (PW .17 )
Father/Husband Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of August 2026

(எதிரி ஆஜர் ) )

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது பல்லடம் உட்கோட்டம் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு திருச்சுழி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 26.11.2015ம் தேதியன்று சார்பு ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்த திருச்சுழி காவல் நிலைய குற்ற எண். 280/2015 பிரிவுகள் 392இதச வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே மதியம் 12.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குருசாமி, ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**அந்த பார்வை மகஜர் அசாஆ14 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.15 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). சாட்சிகள் சைலா, கணேசன், கருப்பையா,

காந்தமலை, ராஜேந்திரன், வஜனத்பேகம், செய்யதலி பாத்திமா, குருசாமி, கருப்பையா, குருசாமி, ஆறுமுகம், சார்பு ஆய்வாளர் சிவகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்தபோது அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 311/2015 பிரிவு 392 இதச மற்றும் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டதாக கூறி எதிரிகள் சைவம், மேழிச்செல்வம் என்ற பிணந்தின்னி செல்வம், குமரேசன் ஆகியோர் மதுரை நகர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தமேற்படி எதிரிகளை 18.04.2016ம் தேதியன்று அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் போலிஸ் காவலுக்கு எடுத்து விசாரித்தபோது மேற்படி மூன்று நபர்களும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் திருச்சுழி காவல் நிலைய குற்ற எண். 268/2015, 280/2015, 4/2016 ஆகிய வழக்குகளில் சம்மதப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்கள். அதன்பேரில் நான் மேற்கண்ட மூன்று எதிரிகளையும் 23.04.2016ம் தேதியன்று எதிரி சைவம் என்பவரை மதுரை மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது செய்து அன்றையதினமே புதுக்கோட்டை மாவட்ட இளவர் சீர்த்திருத்த சிறையில் இருந்த மேழிச்செல்வம் என்ற பிணந்தின்னி செல்வம், குமரேசன் ஆகியோரை சம்பிரதாய கைது செய்தும், மேற்படி மூவரையும் P.T. Warrant மூலம் அருப்புக்கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். கடந்த 06.05.2016ம் தேதியன்று மேற்படி மூன்று எதிரிகளையும் அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து எடுத்து 2 நாட்கள் போலிஸ் காவலில் எடுத்தேன். உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றி நிலையத்தில் வைத்து எதிரிகளை தனித்தனியாக சாட்சிகள் கருப்பையா, சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் 08.05.2016ம் தேதியன்று

காலை 6.00 மணிக்கு குமரேசன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், காலை 7.30மணிக்கு மேழிச்செல்வம் என்ற பிணந்தின்னி செல்வம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், காலை 9.00மணிக்கு சைவம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கு தொடர்புடைய சம்பவமான, 26.11.2015ம் தேதியன்று காலை 9.15மணியளவில் எதிரிகள் மூவரும் திருச்சுழி வந்து நரிக்குடி ரோட்டில் இரு சக்கர வாகனத்தில் ஒரு பெண்ணை பின்தொடர்ந்து சூச்சனேரி விலக்கில் இருந்து கொக்குளம் நோக்கி சென்றபோது அவருக்கு முன்னால் சென்று வாகனத்தை நிறுத்தி முகவரி கேட்பதுபோல் கேட்டு அவரது கழுத்தில் அணிந்திருந்த சுமார் 8பவுண் முறுக்கு தங்க தாலி செயின் ஒன்றை பறித்தபோது செயினை மட்டும் பறித்துச் சென்றதாகவும், தாலியை அந்த பெண் கையில் பிடித்துக் கொண்டார் என்றும் கூறினார்கள். மறு படியும் திருச்சுழி வந்து பேருந்து நிறுத்தத்தில் வந்து சைவத்தை ஏற்றிக் கொண்டு மதுரை சென்று சைவத்தை ஏற்றிக் கொண்டு மதுரை, கீரத்துறைக்கு சென்று அவர்கள் வழக்கமாக தங்க நகைகளை கொடுக்கும் இடமான கீரத்துறையில் உள்ள வெங்காடசலபதி என்பவரிடம் கொடுத்ததாக கூறினார்கள்.

3. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின்படி தன்னைபற்றியும், தாங்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டதால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் மற்றும் சாட்சிகள், எதிரிகள் குமரேசன், மேழிச்செல்வம் என்ற பிணந்தின்னி செல்வம், சைவம் ஆகியோர்களுடன் மதுரை கீரத்துறை சென்று வெங்கடாசலபதி வீட்டிற்கு சென்று பார்த்தபோது வெங்கடாசலபதி வீட்டில் இல்லை. அவர்

தலைமறைவு ஆகிவிட்டதால் எதிரிகளை அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 29.05.2016ம் தேதியன்று பின்னர் சாட்சிகள் கருப்பையா, சத்தியமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.05.2016ம் தேதியன்று அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய குற்றபிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற எண்.140/2016 வழக்கில் எதிரிகள் பதி என்ற வெங்கடாசலபதி மற்றும் மணிகண்டன் ஆகியோரை அருப்புக்கோட்டை ரயில்வே ஸ்டேசன் அருகே வைத்து கைது செய்து மேற்கண்ட இருவரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் செல்வம், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் பதி என்ற வெங்கடாசலபதி எதிரிகளிடம் இருந்து பெற்ற வழக்கு சொத்தான 8 பவுண் எடை கொண்ட தங்க தாலி செயின் ஒன்றை மணிகண்டனிடம் கொடுத்து பணம் பெற்றாக கூறியதால் மணிகண்டனையும் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதில் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகளிடம் இருந்து தான் வாங்கிய 8பவுண் தங்க தாலி செயினை துரைராஜ், குருசாமி ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அதன்பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 95 மூலம் அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. **(அந்த படிவம் 95 அசாஆ16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 11.06.2016ம் தேதியன்று எதிரிகள் மணிகண்டன், பதி என்ற வெங்கடாசலபதி ஆகிய இருவரையும் மதுரை மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது செய்து P.T Warrant மூலம் அருப்புக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். எனது விசாரணையின் அடிப்படையில் ஏற்கனவே இருந்த

சட்டப்பிரிவினை 392 இதசவில் இருந்து 392 மற்றும் 392 உ/இ 411 இதசவாக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ17 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சாட்சிகள் அழகர், அழகர்சாமி, காவல் ஆய்வாளர் ராஜராஜன் , செல்வம், மாரிமுத்து, துரைராஜ், குருசாமி, ஆய்வாளர் சம்பத் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சைலா, கணேசன், கருப்பையா, காந்தமலை, ராஜேந்திரன், வஜனத்பேகம், செய்யதலிபாத்திமா, ரஷியத்பேகம் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது 31.07.2016ம் தேதியன்று 392 மற்றும் 392 உ/இ 411 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி–**

வழக்கின் சாட்சிகள் அனைவரையும் நான்தான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளை நான்தான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். அத்தாட்சி தயார் செய்த இடத்திலேயே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம், சம்பவ இடம் செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. விசாரணைக்காக வந்த எதிரிகளை கைது செய்து நடவடிக்கை

எடுத்துள்ளேன் என்றால்சரியல்ல. வழக்கின் சான்று பொருளுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.